# இராயப்பர் ஆலயமும், இராயபுரம் மற்றும் மைலாப்பூர் குருகுல வம்ச வருணகுல முதலியார்களும்

1799ம் ஆண்டு டிசம்பர் மாதம் 5ந் தேதி மைலாப்பூர் மற்றும் சேப்பாக்கம் கிராமங்களிலிருந்து இராயபுரத்தில் குடியேறிய குருகுல வம்ச வருணகுல முதலியார்களையும் இராயப்பர் ஆலய வரலாற்றையும் தனிதனியாக பிரித்தெடுக்க முடியாது. இவர்கள் தான் ஆலயத்தை உருவாக்கியவர்கள், பாதுகாவலர்கள் ஆவார்கள். அவர்களின் எட்மென் அவர்களுடைய எல்லா விவகாரங்களையும் வழிநடத்தி சென்றவர்கள் ஆகையால் அவர்களின் கடந்த கால வரலாற்றை நினைவு படுத்துவது யாவரும் ஏற்றுக்கொள்ளக்கூடியதே.



புனித இராயப்பர் ஆலயம்

17ம் நூற்றாண்டு வரை இராயப்பர் ஆலயத்தை உருவாக்கிய இராயபுரம் குருகுலவம்ச வருணகுல முதலியார்கள், கொரமண்டல் கடற்கரையில், பழவேற்காட்டிற்கு வடக்கே 40 மைல் தூரத்திலுள்ள துர்கராஜா என்னும் ஒரு சிறிய கிராமத்தில் குடியிருந்தனர். ஆர்மகான் என்பது துர்கராஜா பட்டணத்தின் மறுபெயர். அந்நாளில் இப்பட்டணத்தை விஜயநகர அரசர் ஆண்டு வந்தார். குருகுல வம்ச வருணகுல முதலியார்கள் இந்து மதத்தை தழுவி வந்தனர்.

1626ல் துர்கராஜா பட்டணத்தில் இங்கிலிஷ் கிழக்கிந்திய கம்பெனிக்கு ஒரு இடம் கிடைத்தது. அதில் கோட்டை கட்டி தங்கள் கடல் வழி வர்த்தகத்தை ஆரம்பித்தனர். பிரான்சிஸ் டே என்பவர்தான் துர்கராஜா பட்டினம் வியாபார நிலயத்துக்கு ஏஜென்ட் துர்கராஜா பட்டணத்தில் நான்கு வருடம் தங்கள் வியாபாரத்தை நல்ல விதமாக செய்து வந்தனர், அதன் பிறகு வியாபாரத்தை பிரிட்டிஷ் கிழக்கிந்திய வர்ததகக் கம்பெனி விலக்கிக்கொண்டு, போர்ச்சுகீஸியர் வியாபார நிலையத்துக்கு அதாவது மைலாப்பூர் அருகில் திரும்பவும் வியாபாரத்தை ஆரம்பிக்க நல்ல இடம் பார்க்க பிரான்சிஸ் டே அவர்களை அனுப்பி வைத்தது.

1639ம் வருடம் பிரான்சிஸ் டே அவர்களுக்கு மதராஸ் பட்டணத்தில், நாயக் தமராலா வெங்கடாத்திரி மூலம் சந்திரகிரி ராஜாவிடமிருந்து ஒரு இடம். கிடைத்தது. அந்த இடத்தில் ஒரு கோட்டை கட்ட பதிமூன்றாண்டுகள் எடுத்துக் கொண்டனர். கோட்டைகட்டி முடிந்த பிறகு வேலை வாய்ப்பை கருதி துர்கராஜா பட்டணத்திலிருந்து நல்லவீரன் முதலியார், மொந்தி முதலியார் ஆண்டி முதலியார், ஆச்சாரப்பன் முதலியார் ஆகிய நான்கு குடும்பங்கள் கோட்டைக்கு வடக்கே குடியேறினார்கள். அக்காலத்தில் துறைமுகம் இல்லாததால் மதராஸ் பட்டணத்திற்கு வரும் கப்பல்கள் கோட்டைக்கு கிழக்கு வாயிலுக்கு எதிரே கடலில் நங்கூரம் பாய்ச்சி நிறுத்தப்பட்டிருக்கும். கப்பலில் இருந்து ஆட்களையும் சரக்குகளையும் மசூலா எனப்படும் படகுகள் மூலம் கரைக்கும் கரையிலிருந்து கப்பலுக்கும் எடுத்துச்சென்றனர். இத்தொழிலை குருகுல வம்ச வருணகுல முதலியார்கள் மேற்கொண்டனர்.

1731ம் ஆண்டு கிழக்கிந்திய வர்த்தகக் கம்பெனி தன் செந்த செலவில் குருகுல வம்ச வருணகுல முதலியார்களை கோட்டைக்கு வடக்கேயிருந்து சேப்பாக்கம் கிராமத்தில் குடியமர்த்தியது. சேப்பாக்கத்தில் இருந்த சமயம் இவர்கள் கிருத்துவ மதத்திற்கு மாறினார்கள் அங்கேயே ஒரு சிற்றாலயத்தையும் கட்டினார்கள்.



புனித அந்தோணியார்

1744ம் ஆண்டு இங்கிலாந்து நாட்டிற்கும் பிரான்ஸ் நாட்டிற்கும் இடையே போர் பிரகடணம் செய்யப்பட்டது. அதன் எதிரோலி மதராஸ் பட்டணத்திலும் எதிரொலித்தது. பிரன்ச் தளபதி போர்டோனிஸ் செயின்ட் ஜார்ஜ் கோட்டையை கைப்பற்ற அனுப்பி வைக்கப்பட்டார். குருகுல வம்ச வருணகுல முதலியார்கள் தங்கள் உடமைகளை சேப்பாக்கத்தில் விட்டு விட்டு குடும்பங்களுடன் பிரிட்டிஷ் கட்டுப்பாட்டிலுள்ள தேவனாம் பேட்டையில் அமைந்துள்ள தூய டேவிட் கோட்டைக்கு சென்று இங்கிலாந்திற்கும் பிரான்ஸிற்கும் இடையே சமாதான உடன்படிக்கை கையெழுத்தாகும் வரை அங்கேயே தங்கினார்கள்

1749ம் வருடம் போர் சமாதானத்திற்கு பிறகு படகு உரிமையாளர்களும் படகு ஓட்டுனர்களும் சேப்பாக்கம் திரும்பினார்கள். அரசாங்கம் இவர்களுக்கு ஒரு ஆலயத்தை ஒதுக்கியது. இவ்வாலயத்தின் மதகாரியங்கள் மைலாப்பூர் பிஷப் அவர்களின் கட்டுப்பாட்டில் இருந்தது. இவர்களின் உலகநடைமுறை காரியங்களை ஆச்சாரப்பன் தொம்பையப்பன் முதலியார் கவனித்து வந்தார்.

சான்தோம் வீழ்ச்சியடைந்த பிறகு மைலாப்பூரிலுள்ள முதலியார்களும் சேப்பாககத்திலுள்ள சிற்றாலயத்துக்கு வந்து ஆன்மீக காரியங்களை நிறைவேற்றி வந்தனர். 1798ம் ஆண்டு மைலாப்பூர் மற்றும் சேப்பாக்கம் முதலியார்கள் சேப்பாக்ம் சிற்றாலயத்தை பராமரிக்க வேண்டி ஒரு உடன்படிக்கையை மாஸ்டர் அடெண்டெண்ட் தாஸ்வால் முன்னிலையில் செய்து கொண்டனர். அவ்வொப்பந்தம் பிரகாரம் ஒவ்வொரு படகு உரிமையாளரும் ஒரு படகிற்கு இரண்டு பணம் ஒரு நடைக்கும், 16பேர் கொண்ட போட் குழு ஒரு மாதத்திற்கு 16 பணமும் கொடுக்க வேண்டும் இந்த ஒப்பந்தத்தில் பங்கு கொண்டு பணம் அளிக்க முன்வந்தவர்கள் மொத்தம் 35 பேர்.

அரசாங்கம் 1799ம் ஆண்டு கோட்டையின் கிழக்கு வாயிலில் இயங்கிவந்த கஸ்டம் ஆபிஸ் மற்றும் மாஸ்டர் அடெண்டெண்ட ஆபிஸ் ஆகிய இவ்விரு அலுவலகங்களையும் கருப்பர் நகரத்துக்கு (Black Town) மாற்ற கிழக்கிந்திய வர்ததகக் கம்பெனி முடிவு செய்தது. சேப்பாக்கத்திலுள்ள படகு உரிமையாளர்களையும் படகுஓட்டுநர்களையும் தங்கள் பார்வைக்குள் கொண்டுவர முடிவு செய்து பிளாக் டவுனிலுள்ள வடக்கு அரணிலிருந்து 300 கஜம் தள்ளி கிருத்துவர்களும் அவற்கு மேல் பிறமதத்தினரும் குடியமர்த்தப்பட்டனர்



புனித இராயப்பர் ஆலயம்

கிருத்துவர்கள் புதிதாக குடியேறிய இடத்தில் அவர்கள் கடவுளை வழிபட ஆலயம் இல்லாததால் ஒரு நிலத்தை விலைக்கு வாங்கி ஒரு சிற்றாலயம் அமைத்தனர். அதற்கு தூய இராயப்பர் என பெயரிட்டு அருட்தந்தை ஜீன் பாப்டிஸ்ட் என்ற கபூச்சன் குருவானவர் அவர்களை நியமித்தார்கள். எட்மென்கள் ஆலயத்தை நிர்வாகம் செய்ய படகு உரிமையாளர்கள் மற்றும் படகு குழுவிடம் வரி வசூலித்தனர். இதற்குள் ஆலய குருவானவருக்கும் எட்மென்களுக்கும் இடையே கருத்து வேற்றுமை உண்டாயிற்று. இதனால் இராயப்பர் ஆலய நிதி அரசாங்க பெட்டகத்தற்கு மாற்றபட்டது.

இப்போழுதுள்ள இராயப்பர் ஆலயம் அரசாங்கம் அனுமதியளித்த ரூபாய் 40000 த்தைக் கொண்டு 1825ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு 1829ம் வருடம் முடிவடைந்தது. ஆலயத்தின் சாவியை பொறியாளர் பால்பேர் (Balfour) அவர்கள் தற்காலிக எட்மென்களிடம் ஒப்படைத்தார். அப்போழுது மைலாப்பூர் தற்காலிக பிஷப்பாக இருந்த டாம் மானுவல் டி ஆவே மரியா (Dom Manueal de Ave Maria ) ஆலயத்தை பிரதிஷ்டை செய்து அருட்தந்தை அந்தோணிஸ் மார்டின் டி சில்வா (Rev.Fr.Anthonis Martin de Silva ) அவர்களை ஆலயத்ததின் விகாராக நியமித்தார்.

1834ல் பேரருட்தந்தை கோன்னார் அவர்கள் இராயப்பர் ஆலயத்திற்கு விஜயம் செய்தபோது அருட்தந்தை மார்டின் டிசில்வா அவர்கள் இராயப்பர் ஆலயத்துக்கு விகாராக பணிசெய்துவந்தார். இவர் தேர்தல் மூலம் நியமனம் செய்யப்பட்டவர். அப்படி இருப்பினும் பேரருட்தந்தை டாக்டர் டானியேல் கோன்னார் அவர்கள் அவர் அழைத்துவந்த அருட்தந்தை மைக்கேல் அவர்களை இராயப்பர் ஆலய விகாராக நியமித்ததாக ஆலயத்தில் அறிவித்தார். இதன் காரணமாக எட்மென்களுக்கிடையில் பிளவு உண்டாயிற்று. ஒரு சாரார் ஐரிஷ் சபையையும் மற்றொரு சாரார் கோவா சபையையும் ஆதரிக்க முற்பட்டடனர். கோவா சபையை ஆதரிப்பவர்கள் இராயப்பர் ஆலயத்துக்கு வருவதை நிறுத்திக் கொண்டனர். வெகு தொலைவிலுள்ள (பழைய கொத்தவால் சாவடிக்கு அருகில்) தூய ஜான் ஆலயத்துக்கு சென்றனர். இவ்வாறு சென்று வருவது மிகவும் சிரமமாயிருப்பதால் இராயபுரத்திலேயே தங்களுக்கு ஒரு ஆலயத்தை கட்டுமாறு மைலாப்பூர் விகார் ஜெனரல் அவர்களை வேண்டிக் கேட்டுக் கொண்டனர். இதன் பயனாக கோவா சபை ஆதரவாளர்களுக்கென்று இராயப்பர் ஆலயத்துக்கு எதிரில் தூய அந்தோணியார் ஆலயம் கட்டப்பட்டது. இதன்பிறகு முதலியார்கள் இரண்டு பிரிவாக செயல்பட்டனர்.

கோவா சபை தீவிர ஆதரவாளர்களில் ஒருவரான நல்லவீரன் அண்ணாபிள்ளை முதலியார் சில காலமாக நோய்வாய்பட்டு படுக்கையில் இருந்தார். அவருடைய கடைசிகால சடங்கை (அவஸ்தைபூசுதல்) தூய அந்தோணியார் ஆலய குருவானவர் செய்து வைத்தார். அவர் 1848ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் முதல் தேதி மரணம் அடைந்தார். இவர் மறைவிற்கு பிறகு அவருடைய சகோதரர் நல்லவீரன் மரியதாஸ் முதலியார் எட்மென் பொறுப் பெற்றார். நல்லவீரன் மரியதாஸ் முதலியார் அப்போதைய இராயப்பர் ஆலய விகாராக இருந்த ஜோசப் மர்பி அவர்களை எதிர்த்து தன் சகோதரரின் உடலை இராயப்பர் ஆலயவளாகத்தில் அடக்கம் பண்ணினார். இதன்காரணமாக இவர் இராயப்பர் ஆலய விகார் தாக்கல் செய்த ஒரு அத்துமீறல் வழக்கை சந்திக்க நேர்ந்தது.

கோவாசபை மற்றும் ஐரிஷ் சபை எட்மென் கோரும் உரிமையை கண்டறிய அட்வோகட்ஜெனரல் அவர்களின் ஆலோசனை பெறப்பட்டது, இவரின் ஆலோசனை இரண்டு கோஷ்டிகளுக்கும் மெரைன் போர்டு அனுப்பி வைத்தது.

அட்வோகட் ஜெனரல் ஆலோசனை பெற்றபின் எட்மென் அண்ணாத்தை அப்பாசாமி முதலியார் ஐரீஷ தீவிரவாதி அரசாங்கத்தின் மீது வழக்கு தொடர்ந்தார் வழக்கு எண் C.S.No.105 of 1863 அவருடைய முக்கிய கோரிக்கை என்வென்றால் இராயப்பர் ஆலய நிதியிலிருந்து ஆலய பராமரிப்புக்கு பணம் தரவேண்டும் என்பதாகும்.

வழக்கின் தீரிப்பில் நிதியம் வழக்கு எண் C.S.No.105 of 1863 வரவில் வைக்கப்பட்டது. மேலும் ஆலய விகாரை மக்களே தேர்வு செயயலாம் என்பது முக்கிய இடத்தை பிடித்திருந்தது, நீதிமன்ற தீர்ப்பின்படி குருவானவரை தோந்தெடுக்க இராயப்பர் ஆலய வளாகத்தில் 1865ம் ஆண்டு ஜூன் மாதம் 17ந் தேதி தேர்தல் நடைபெற்றது. தேர்தலில் கோவா சபையை பெரும்பாலான மக்கள் ஆதரித்ததால் மைலாப்பூர் விகார் ஜெனரல் அவர்கள் அருட்தந்தை வின்சென்ட் டிசில்வா அவர்களை இராயப்பர் ஆலய குருவானவராக நியமித்தார்.

இந்த நேரத்தில் இராயப்பர் ஆலயத்தில் விகார் அப்போஸ்தலிக் அவர்களால் நியமிக்கப்பட்ட அருட்தந்தை ஞானபிரகாசநாதர் பணியாற்றி வந்தார். இவர் தேர்தல்முலம் தேரந்தெடுக்கப்பட் அருட்தந்தை வின்சென்ட் டிசில்வா அவர்களுக்கு ஆலயத்தில் பணியாற்ற வழி விடவில்லை. எட்மென்கள் விகார் அப்போஸ்தலிக் அவர்களிடமும் முறையிட்டனர் எந்த பலனும் கிடைக்கவில்லை

வேறு வழியன்றி அருட்தந்தை மார்டின் டிசில்வா மற்ற இரண்டு எட்மென்களும் ஒன்று சேர்ந்து அருட்தந்தை ஞானபிரகாசநாதர் மற்றும் விகார் அப்போஸ்தலிக் பேரருட்தந்தை டாக்டர் பென்னலே ஆகியோர் மீது வழக்கு தொடர்ந்தனர் இவ்வழக்கிலும் மக்களே குருவானவரை தேர்வு செய்யலாம் என்ற தீர்ப்பு வந்தது. இதன்படி பிண்டோ அவர்களை மைலாப்பூர் விகார் ஜெனரல் அவர்கள் நியமித்தார்.

இவ்வழக்கின் ஆணை வெளியாவதற்கு முன் வழக்கின் வாதி அருட்தந்தை மார்டின் டிசில்வா அவர்கள் மரணமடைந்தார். அதன்பிறகு அருட்தந்தை ஞானபிரகாசநாதர் அவர்களே இராயப்பர் ஆலய குருவானவராக நீதிமன்ற தீர்ப்பின்படி பணியாற்றி வந்தார்.

அட்வோகட்ஜெனரல் அவர்கள் எட்மென்கள் மீது ஒரு வழக்கு தொடர்ந்தார்.C.S.No.102 of 1880 / இவ்வழக்கின் தீர்ப்பிலும் மக்கள் தேர்ந்தெடுத்த குருவானவரே விகாராக நியமிக்க உத்திரவு பிறப்பிக்கப்பட்டது. அவ்வாறே தேர்வு செய்யப்படட குருவானவர்களே பணிபுரிந்து வந்தனர். அருட்தந்தை A.மைக்கேல் அவர்கள் 1920ம் வருடம் முதல் 1925 வரை பணியாற்றி வந்தார். பிறகு பதவியை ராஜினாமா செய்தார்.

1925ம் வருடம் முதல் 1934ம் ஆண்டு வரை சென்னை பேராயர் அவர்கள் இராயப்பர் ஆலயத்திற்கு குருவானவரை அனுப்பவில்லை. ஆதலால் ஆலயம் குருவானவர் இல்லாமல் பத்து ஆண்டுகள் மூடப்பட்டது

முதலியார் சமூகத்தைச் சேர்ந்த P.A.ராஜய்யா முதலியாரும் மற்றோரு முதலியாருமான ஞானபிரகாச முதலியார் ஆகியோர் ஆலயத்தை திறக்ககோரி வழக்கு தொடர்ந்தனர்.C.S.No.198 of 1934 / இவ்வழக்கின் தீர்ப்பில் இராயப்பர் ஆலய நிதி அபிஷியல் டிரஸ்டியிடம் (Official Trustee) மாற்றப்பட்டது. வாரிசுமுறை எட்மென் தேர்வு ஒழிக்கப்பட்டு மக்களால் தேர்வு செய்யப்படும் டிரஸ்டிகள் ஆரம்பமாயின.

வழக்கு எண் C.S.No.198 of 1934 தீர்ப்பின் அடிப்படையில் டிரஸ்டிகள் தேர்வு

R.N.தனபால் முதலியார் அவர்கள்1938ம் ஆண்டு ஜனவரி மாதம் 23ந்தேதி C.S.No.198 of 1838தீர்ப்பை விளக்கி கூற மெயின் ரோட் 17ம் நம்பர் வீட்டில் கூட்டத்தை நடத்த ஏற்பாடு செய்திருந்தார்.

நடைபெற்ற அந்த கூட்டத்தில் R.N.தனபால் முதலியார் தலைவராகவும் மற்றும் S.J.துரைசாமி முதலியார், P.ஞானபிரகாச முதலியார் மற்றும் R தைரியம் முதலியார் ஆகியோரை உறுப்பினராகவும் வரும் தேர்தலில் போட்டியிட தேர்ந்தெடுத்தனர். 15,3,1938ல் நடந்த தேர்தலில் இவர்கள் போட்டியிட்டு வெற்றிபெற்றனர். R.N.தனபால் முதலியார் டிரஸ்ட் போர்டின் தலைவராகவும் பள்ளியின் கரஸ்பாண்டென்ட் ஆகவும் பொறுப்பெற்றார்.

1939ல் பேராயர் அவர்கள் வழக்கு எண் C.S.No.198 of 1938 தீர்ப்பில் கூறியுள்ளபடி ஏழாவது உறுப்பினராக அருட்தந்தை P.மரியசெல்வம் அவர்களை நியமித்தார்.எட்மென்களுக்கிடையே நிலவி வந்த கருத்து வேற்றுமை தொடர்ந்தது.ஆருட்தந்தை மரியசெல்வம் ஆலயத்தை விட்டு வெளியேறினார். இதன்பிறகு அருட்தந்தை ஜோசப் அவர்கள் நியமிக்கப்பட்டு 6.3.1941வரை பணிபுரிந்துவிட்டு வெளியேறினார்.

ஆலயம் குருவானவர் இல்லாமல் பதிநான்கு வருடங்கள் மூடி கிடந்தது.
P.A ராஜய்யா முதலியார் மற்றும் ஞானபிரகாச முதலியார் ஆகியோர் கோவிலை திறக்க வழக்கு தொடர்ந்தனர் வழக்கு எண் C.S,,No,10 of 1949 வழக்கை விசாரித்த கனம் நீதிபதி அவர்கள் முந்திய தீர்ப்பில் சில மாற்றங்களை செய்து தீர்ப்பு வழங்கினார். அந்த தீர்ப்பில் கூறியுள்ளதாவது :-கோவில் மற்றும் வளாகத்தைச் சுற்றியுள்ள கடைகள் பள்ளிகள் அனைத்தும் பேராயர் வசம் விடப்படுகிறது. இத்தீர்பபை எதிர்த்து நீதிமன்றத்தில் டிரஸ்டிகள் போட்ட வழக்கு தள்ளுபடி செயப்பட்டது. உச்சநீதிமன்றத்தால் மேல் முறையீட்டு வழக்கும் தள்ளுபடி செய்யப்பட்டது. சில காலம் கழித்து தாஸ் முதலியார் மற்றும் மகிமைதாஸ் முதலியார் போட்ட வழக்கினால் மீண்டும் கோவிலை தவிர்த்து மீதியிருப்பவை எல்லாம் டிரஸ்டிகளிடம் வந்து விட்டன.

ஆலயவளாகத்தில் உள்ள கடைகள் மூலம் வரும் வருமானத்தை வைத்து டிரஸ்டிகள் ஆலய பராமரிப்பு,ஏழை மாணவ மாணவிகளுக்கு எல்லாவித படிப்புசெலவுகளையும் ஏற்பது, வயோதிகர், ஊனமுற்றோர், விதவைகள் மற்றும் கர்ப்பிணி பெண்களுக்கு பண உதவி செய்தல் இறந்தவர்களுக்கு சவ அடக்கம் செய்ய பண உதவி அளித்தல்முதலிய நற்கார்யங்தளை செய்து வருகின்றனர்.


புனித இராயப்பர் ஆலயம்


மத்திய பீடத்தின் தோற்றம்


புனித சூசையப்பர்


சிந்தாத்திரி மாதா


கெபி


குழந்தை இயேசு


புனித அந்தோணியார்


ஞானஸ்நாந தொட்டி